# இயல்பு கூட்டப்பொருட்கள்

1. இம்மாநகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை உரிம இனத்திற்கு 2022-2023-ம் ஆண்டு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கீழ்கண்ட விபரப்படி கோரப்பட வேண்டியுள்ளது.

| வ. எ ண் | உரிம இனங்களின் விபரம் | கால அளவு (ஒப்படைக்கும் நாள் முதல்) | ஏல பொறுப்பு தொகை ரூ. | தேசியமயமாக்கப் பட்ட வங்கி உத்திரவாத சான்று தொகை ரூ. |
|---|---|---|---|---|
| I | **பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி** | | | |
| 1. | தெங்கம்புதூர் வடக்கு அஞ்சுகுடியிருப்பு குடிநீர் கீழ்நிலை தொட்டி வளாகத்தில் உள்ள தென்னை மரம் 18 எண்ணம் மற்றும் கமுகு மரம் 7 எண்ணம் மரங்களின் மேலாதாயம் அனுபவிக்கும் உரிமம். | 2022-2023 முதல் 2024-2025 வரை | 10,000/- | - |
| 2. | மாநகராட்சிக்கு சொந்தமான சர்.சி.பி. இராமசாமி ஐயர் நினைவு பூங்காவில் மாநகராட்சியால் சுட்டிக்காட்டப்பட்ட இடத்தில் சிறுவர், சிறுமியருக்கான ஆறு வகையான சிறிய அளவிலான விளையாட்டு சாதனங்கள் அமைத்து தற்காலிகமாக கட்டணம் வசூல் செய்திடும் உரிமம். | 2022-2023 முதல் 2024-2025 வரை | 1,00,000 மற்றும் மின் கட்டண வைப்புத் தொகை 50,000 | 2,00,000 |
| II | **மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி** | | | |
| 3. | முதலியார்விளை வாடகை கார் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 2022-2023 முதல் 2024-2025 வரை | 30,000/- | 20,000/- |
| 4. | வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள 12 ½ x8½ ச.அடி அளவில் வீடியோ வாலில் (Video Wall) விளம்பரம் செய்திடும் உரிமம். | 2022-2023 முதல் 2024-2025 வரை | 1,00,000 மற்றும் மின் கட்டண வைப்புத் தொகை 20,000 | 1,00,000/- |
| 5. | முக்கடல் அணை வளாக பகுதியில் 10x10 சதுர அடி அளவில் தற்காலிக ஸ்டால் அமைத்து தரமான திண்பண்டங்கள் விற்பனை செய்திடும் உரிமம். | 2022-2023 முதல் 2024-2025 வரை | 75,000 | 75,000 |
| 6. | அண்ணா மற்றும் வடசேரி பேருந்து நிலையங்களில் வந்து செல்லும் பேருந்துகளிடம் நுழைவு கட்டணம் வசூல் செய்திடும் உரிமம். | 2022-2023 முதல் 2024-2025 வரை | 5,00,000 | 10,00,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 7. | அண்ணா பேருந்து நிலையத்தில் மாநகராட்சியால் சுட்டி காட்டப்பட்ட இடத்தில் 12 ½ x8½ ச.அடி அளவில் வீடியோ வால் அமைத்து விளம்பரம் செய்திடும் உரிமம். | 2022–2023 முதல் 2024–2025 வரை | 1,00,000 மற்றும் மின் கட்டண வைப்புத் தொகை 20,000 | 1,00,000 |
| II | **தற்காலிக உரிமம்** | | | |
| 8. | நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான மகாராஜா ஸ்ரீ அவிட்டம் திருநாள் நினைவு மாநகராட்சி காப்பக மைதானத்தில் 25.08.2022 முதல் 09.10.2022 வரை பொருட்காட்சி நடைபெற இருப்பதால் கண்டுகளிக்க வருகை தரும் பொதுமக்களின் வாகனங்களுக்கு, இரு சக்கர வாகனம் 1–க்கு ரூ.10/–ம், மூன்று / நான்கு சக்கர வாகனம் 1–க்கு 40/–ம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 25.08.2022 முதல் 09.10.2022 வரை | 50,000 | – |

மேற்படி விபரப்படி பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிக்கை தினசரி நாளிதழில் வெளியீடு செய்திடவும், அதற்குண்டான விளம்பர செலவினங்களுக்கு அனுமதிக்கும் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதியுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமைக்கு மாமன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

1. அனுமதிக்கலாம்.
2. மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கைகள்
   மேற்கொண்டமைக்கு மாமன்றம் அங்கீகாரம் அளிக்கலாம்.

கோப்பு எண்.1266/2017/அ8

**தீர்மானம் எண்.468 அனுமதிக்கப்பட்டது**

2. இம்மாநகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்களின் 2022–2023 ஆம் ஆண்டு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகம் மூலம் விளம்பரம் செய்த வகைக்கு தினசரி நாளிதழுக்கு ரூ.43,747/– வழங்கிட மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.7604/2022/அ8

**தீர்மானம் எண்.469 அனுமதிக்கப்பட்டது**

3. இம்மாநகராட்சிக்குட்பட்ட (வார்டுகள் 1, 2, 3, 50, 51, 52 நீங்கலாக) தெருவிளக்குகள், புத்தேரி மேம்பால விளக்குகள், வடசேரி பேருந்து நிலைய உயர் கோபுர மின்கம்ப விளக்குகள் (ம) High mass Lights ஆகியவற்றின் பராமரிப்பு பணிகளை 01.09.2021 முதல் ஒரு வருடத்திற்கு "Samurai Industrial Electricals" Tirunelveli என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனம், தெருவிளக்குகள் பராமரிப்பு பணியினை சரிவர செய்யாததால், பல புகார்கள் வந்து கொண்டு இருந்தது. On–Off பணி சரிவர நடைபெறவில்லை. தற்போது மாமன்ற உறுப்பினர்கள் மூலமாக

ஏராளமான புகார்கள் வந்துள்ளது. தெருவிளக்கு பராமரிப்பு பணியினை சரியாக செய்யாத காரணத்தால் இது சம்மந்தமாக 18.10.2021, 04.04.2022, 06.05.2022 (இறுதி அறிவிப்பு) ஆகிய மூன்று அறிவிப்புக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இறுதி அறிவிப்பு கடிதம் அனுப்பியும் (எந்தவிதமான பதிலும்) குறிப்பிட்ட தேதிக்குள் பராமரிப்பு பணியினை செய்து முடிக்கவில்லை. தெருவிளக்கு பராமரிப்பு பணி மிகவும் அத்தியாவசிய பணி என்பதால் மதிப்பிற்குரிய மேயர் மற்றும் ஆணையர் அவர்களின் உத்தரவுபடி மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தத்தை ரத்து செய்திடவும், மேற்படி Tender –ல் (Street Lights Operation and maintenance) L2 –வான Anantha Electricals, Coimbatore என்ற நிறுவனம் L1–க்கான ஒப்பந்தப்புள்ளி Rate –க்கு மேற்படி பணியினை செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளமையால் 31.08.2022 வரை தெருவிளக்கு பராமரிப்பு பணியினை Anantha Electricals, Coimbatore என்ற நிறுவனத்திற்கு வழங்கிடவும் மாமன்றத்தின் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்**

கோப்பு எண்.9845/2021/இ4

**தீர்மானம் எண்.470 அனுமதிக்கப்பட்டது**

4. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15–ல் W.C.C.Road –ல் பாராளுமன்ற உறுப்பினர் அலுவலகம் உள்ளது. இந்த அலுவலகத்தின் நுழைவு வாயிலின் இருபுறமும் இரண்டு மின்கம்பங்கள் உள்ளன. இந்த இரண்டு மின்கம்பங்களிலும் 2 எண்ணம் புதிய தெருவிளக்குகள் அமைத்திடவும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்**

கோப்பு எண்.6814/2022/இ4

**தீர்மானம் எண்.471 அனுமதிக்கப்பட்டது**

5. இம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் சாலை பாதுகாப்பு மற்றும் முன்னேற்றம் கருதி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிதியின் கீழ் Speed Limit board 20 எண்ணம் அமைத்தல் பணிக்கு ரூ.2,00,000/–க்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் படி 06.05.2022 அன்று (E–Tendering) முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் பின்வருமாறு.

| ஒப்பந்தப்புள்ளி விபரம் | | |
|---|---|---|
| 1 | V.N. கன்ஸ்ட்ரக்ஸன்<br>சரக்கல்விளை | மதிப்பீட்டை விட 12.00% குறைவு<br>(ரூ.134780.80) |
| 2 | திரு. G.ராஜன்<br>ஒப்பந்ததாரர்<br>வெட்டூர்ணிமடம் | மதிப்பீட்டை விட 3.36% குறைவு<br>(ரூ.148000.00) |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள V.N.கன்ஸ்ட்ரக்சன் நிறுவனம் மதிப்பீட்டை விட 12.00% குறைவாக கொடுத்துள்ளதால் கூடுதல் வைப்புத்தொகை ரூ.3100/–ஐ செலுத்திய பின்னர் வேலை உத்தரவு வழங்கிடவும் மாமன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு –** 1. அனுமதிக்கலாம்

2. பணியின் அவசர அவசியம் கருதி மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

மதிப்பீட்டு எண்.07/2022–2023/இ3

**தீர்மானம் எண்.472 அனுமதிக்கப்பட்டது**

6. இம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலை பாதுகாப்பு மற்றும் முன்னேற்றம் கருதி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் நிதியின் கீழ் Caution board 15 எண்ணம் அமைக்கும் பணிக்கு ரூ.1,00,000/-க்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் படி 06.05.2022 அன்று (E-Tendering) முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம்.

| ஒப்பந்தப்புள்ளி விபரம் | | |
|---|---|---|
| 1) | V.N.கன்ட்ரக்ஸன்ஸ்<br>சரக்கல்விளை | மதிப்பீட்டை விட 7.00% குறைவு<br>(ரூ.46620.90) |
| 2) | திரு.S.பால்நேசமணி<br>ஒப்பந்ததாரர்<br>அனந்தநாடார்குடி | மதிப்பீட்டை விட 4.90% குறைவு<br>(ரூ.47670.00) |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள V.N.கன்ட்ஸ்ரக்ஸன்ஸ் நிறுவனம் மதிப்பீட்டை விட 7.00% குறைவாக கொடுத்துள்ளதால் கூடுதல் வைப்புத்தொகை ரூ.1000/-ம் செலுத்திய பின்னர் வேலை உத்தரவு வழங்கவும் மாமன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு –**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

மதிப்பீட்டு எண்.06/2022-23/இ3

**தீர்மானம் எண்.473 அனுமதிக்கப்பட்டது**

7. இம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் சாலை பாதுகாப்பு மற்றும் முன்னேற்றம் கருதி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிதியின் கீழ் No parking 12 எண்ணம் அமைக்கும் பணிக்கு ரூ.1,00,000/-க்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன்படி 06.05.2022 அன்று (E-Tendering) முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் பின்வருமாறு.

| ஒப்பந்தப்புள்ளி விபரம் | | |
|---|---|---|
| 1) | V.N.கன்ஸ்ட்ரக்சன்<br>ஒப்பந்ததாரர்<br>சரக்கல்விளை | மதிப்பீட்டை விட 12.00% குறைவு<br>(ரூ.57140.16) |
| 2) | திரு.S.பால்நேசமணி<br>ஒப்பந்ததாரர்<br>அனந்தநாடார்குடி | மதிப்பீட்டை விட 4.91% குறைவு<br>(ரூ.61740.00) |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள V.N.கன்ஸ்ட்ரக்சன் நிறுவனம் மதிப்பீட்டை விட 12.00% குறைவாக கொடுத்துள்ளதால் கூடுதல் வைப்புத்தொகை ரூ.1300/-ஐ செலுத்திய பின்னர் வேலை உத்தரவு வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு –** 1. அனுமதிக்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

மதிப்பீட்டு எண்.08/2022-23/இ3

**தீர்மானம் எண்.474 அனுமதிக்கப்பட்டது**

8. இம் மாநகராட்சியில் 15–வது மத்திய நிதிக்குழு மானியம் (CFC) 2021–2022–ன் கீழ் முக்கடல் அணையில் இருந்து தண்ணீர் குழாய் அறுகுவிளை பகுதியில் 600mm MS Pipe Line மற்றும் PSC குழாய்களை பழுதான இடங்களில் மாற்றும் பணிக்கு ரூ.15,00,000/–க்கு நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க 31.05.2022 அன்று (E–Tendering) முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் பின்வருமாறு.

| ஒப்பந்தப்புள்ளி விபரம் | | |
|---|---|---|
| 1) | திரு.T.அசோக்குமார்<br>(காட்டாத்துறை)<br>ஒப்பந்தக்காரர் | (+) 3.10% மதிப்பீட்டை விட கூடுதல்<br>(ரூ.1254800.00) |

மேற்படி பணிக்கு வரப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்ததாரர் திரு.T.அசோக்குமார் (காட்டாத்துறை) என்பவர் மதிப்பீட்டை விட (+) 3.10% கூடுதலாக கொடுத்துள்ளதால் ஒப்பந்ததாரர்ரிடம் (Negotation) விலைக் குறைப்பு செய்து தர கேட்டு 28.06.2022 அறிவிப்பு அனுப்பப்பட்டதன்படி 30.06.2022 அன்று (Negotation) விலை குறைப்பு செய்து தர சம்மத கடிதம் கொடுத்துள்ளதன்படி அதனை ஏற்று திருத்திய ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

| ஒப்பந்தப்புள்ளி விபரம் | |
|---|---|
| திரு.T.அசோக்குமார்<br>(காட்டாத்துறை)<br>ஒப்பந்தக்காரர் | மதிப்பீட்டை விட 0.20% குறைவு<br>(ரூ.715685.76) |

மேற்படி பணிக்கு ஒப்பந்ததாரர் திரு.T.அசோக்குமார் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்கவும், பணியின் அவசர அவசியம் கருதி மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதும் மாமன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்**

கோப்பு எண். 19/2022–2023/இ3

**தீர்மானம் எண்.475 அனுமதிக்கப்பட்டது**

9. நாகர்கோவில் மாநகராட்சி பகுதியில் 15–வது மத்திய நிதிக்குழு மானியம் Tied Grand 2021–2022 ஆண்டுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியின் கீழ் இம்மாநகராட்சி கிறிஸ்து நகர் பகுதியில் உள்ள (வடக்கு மற்றும் தெற்கு) 8.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டியில் பராமரிப்பு பணிகள் மற்றும் பெயிண்டிங் பணிகள் செய்தல் பணிக்கு ரூ.8,00,000/–க்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் படி கடந்த 31.05.2022 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.P.C.அந்தோணி மரிய கிரேட்டஸ்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 12.17% குறைவு<br>ரூ.592132.92/– |
| 2 | திரு.S.செல்லம்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 12.08% குறைவு<br>ரூ.592747.16/– |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்ததாரர் திரு.P.C.அந்தோணி மரிய கிரேட்டஸ் என்பவர் மதிப்பீட்டை விட 12.17% குறைவாக கொடுத்துள்ளதால் கூடுதல் வைப்புத்தொகை ரூ.13,500/–ஐ செலுத்திய பின்னர் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்காக.

**அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்**

மதிப்பீட்டு எண்.16/2022–2023

**தீர்மானம் எண்.476 அனுமதிக்கப்பட்டது**

10. இம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியான சாலை பாதுகாப்பு மற்றும் முன்னேற்றம் கருதி மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் நிதி 2022–2023–கீழ் கல்கோவில் பகுதியில் Traffic Island அமைத்தல் பணிக்கு ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் மின்னனு முறை (E–Tendering) 05.07.2022 அன்று மூன்றாவது முறை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம்.

| | | |
|---|---|---|
| 1 | திரு.G. ஜெகதீஸ் குமார்<br>ஒப்பந்தகாரர்<br>காஞ்சிராங்கோடு | மதிப்பீட்டை விட 0.73% குறைவு<br>ரூ.445330.00/– |

வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்தகாரர் திரு.G. ஜெகதீஸ் குமார் என்பவர் மதிப்பீட்டை விட 0.73% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்கவும் மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்**

மதிப்பீட்டு எண்.05/2022–2023

**தீர்மானம் எண்.477 அனுமதிக்கப்பட்டது**

11. இம் மாநகராட்சிக்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ராமர் காலனி ஓடையில் அருகே சிறுபாலம் அமைத்து தடுப்பு சுவர் அமைக்கும் பணிக்கு ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் மின்னனு முறை (E–Tendering) 30.06.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம்.

| | | |
|---|---|---|
| 1 | திரு.T.அசோக்குமார்<br>ஒப்பந்தகாரர்<br>இலந்தையடி தட்டு | மதிப்பீட்டை விட 14.00% குறைவு<br>(ரூ.604047.62/–) |
| 2 | திரு.K.மணிகண்டன்<br>ஒப்பந்தகாரர்<br>சரக்கல்விளை | மதிப்பீட்டை விட 6.10% குறைவு<br>ரூ.659535.71/– |

வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.T.அசோக்குமார் என்பவர் மதிப்பீட்டை விட 14.00% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்கவும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.16000/– செலுத்திய பின்னர் பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற மேயர் அவர்களின் மன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்**

மதிப்பீட்டு எண்.23/2022–2023

**தீர்மானம் எண்.478 அனுமதிக்கப்பட்டது**

12. இம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மூலதனமானிய நிதி (CGF 2021–2022) திட்டத்தின் கீழ் வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையம் மற்றும் வடசேரி ஆம்னி பேருந்து நிலையம் ஆகிய பேருந்து நிலையங்களில் கூடுதல் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுவதற்கு மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி Times of India மற்றும் மாலைமுரசு நாளிழிதல் 28.06.2022 விளம்பரம் செய்த வகையில் செலவினத் தொகை பட்டியல் படி ரூ.47302/– சென்னை செய்தி (ம) மக்கள் விளம்பர துறையின் வாயிலாக கோரியதன் படி Ravi Publicity Service அவர்களுக்கு விளம்பரம் செய்தமைக்கும் தொகையை விடுவிக்கவும் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தொகையினை வழங்கிடவும் மாமன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்**

கோப்பு எண். 12108/2021/இ3

**தீர்மானம் எண்.479 அனுமதிக்கப்பட்டது**

13. இம் மாநகராட்சிக்கு சொந்தமான வட்டவிளை நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்ட CTM புரம் பகுதியில் நலவாழ்வு மையம் அமைத்தல் பணிக்கு ரூ.25,00,000/–க்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் படி கடந்த 11.03.2022 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்ததாரர் திரு.ஜோசப் அருள் ராஜ் என்பவருக்கு மாமன்ற தீர்மானம் எண்.302, நாள்.27.05.2022 அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இளநிலை பொறியாளரின் 20.07.2022–ன் அறிக்கையில் இடம் நேராய்வு செய்யப்பட்டு மேற்படி இடத்தில் நலவாழ்வு மையம் கட்டடப்பணிகள் ஆரம்பிக்கும் போது பொதுமக்களும், மாமன்ற உறுப்பினர் அவர்களால் நகர் நல மையம் கட்ட கூடாது என எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. மேற்படி இடத்திற்கு பதிலாக வார்டு எண்.52, தெங்கம்புதூர் கலை நகர் ஆதி திராவிடர் குடியிருப்பு பகுதியில் நகர்நல மையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று அறிக்கை சமர்பித்துள்ளார். எனவே அறிக்கையின் படி வார்டு எண்.52 தெங்கம்புதூர் கலை நகர் (ஆதிதிராவிடர் குடியிருப்பு) பகுதியில் நகர்நல மையம் அமைத்திட அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்காக.

**அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்**

மதிப்பீட்டு எண்.204/2021–2022

**தீர்மானம் எண்.480 அனுமதிக்கப்பட்டது**

14. நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான "ஸ்ரீஅவிட்டம் திருநாள் மஹாராஜா" மைதானத்தில் நகர் முழுவதும் சேகரமாகும் மண் குவியல்கள் கொட்டப்பட்டு மைதானம் நிரம்பி காணப்பட்டதால் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களும், ஆணையர் அவர்களும் கள ஆய்வின் போது சம்மந்தப்பட்ட மண் குவியல்களை அப்புறப்படுத்த வேண்டும் என தெரிவித்ததன் அடிப்படையில் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.23,10,000/–க்கு (ரூபாய் இருபத்தி மூன்று லட்சத்தி பத்தாயிரம்) அனுமதியும், பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சி சட்டவிதி எண்.15–ன் கீழ் மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.K.கைலாஷ்குமார் என்பவரின் விலைப்புள்ளி அடிப்படையில் Negotation பெறப்பட்டு 6% குறைவாக மேற்படி பணியினை செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளார். எனவே ஒப்பந்ததாரர் திரு.K.கைலாஷ்குமார் என்பவர் மூலம் பணியினை செய்து முடிக்கவும், மேயர் அவர்களின் முன் அனுமதியினை பெற்று வேலை உத்தரவு வழங்கவும் மாமன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்**

கோப்பு எண்.6372/2022/இ1

**தீர்மானம் எண்.481 அனுமதிக்கப்பட்டது**

15. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.48–ல் பள்ளிவாசல் அருகே உள்ள புதுத்தெருவில் கான்கிரீட் தளம் அமைத்தல் வேலைக்கு (பொது நிதி 2022–2023) தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4,60,000/–க்கு (ரூபாய் நான்கு லட்சத்தி அறுபதாயிரம்) அனுமதியும் பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதும் மாமன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்**

கோப்பு எண்.7050/2022/இ1

**தீர்மானம் எண்.482 அனுமதிக்கப்பட்டது**

16. நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான புல எண்.15/19–ல் 35 சென்ட் பரப்பு கொண்ட இடத்தில் (கோணம்) புதியதாக மாநகராட்சி ஆணையர் குடியிருப்பு கட்டடம் கட்டுதல் வேலைக்கு (பொது நிதி 2021–2022–ன் கீழ்) ரூ.25,00,000/–க்கு மாமன்ற தீர்மானம் எண்.349 நாள்.27.05.2022–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன்படி 31.05.2022 அன்று E–

Tendering முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் பின்வருமாறு.

| ஒப்பந்தப்புள்ளி விபரம் | | |
|---|---|---|
| 1 | திரு.P.C.அந்தோணி மரிய கிரேட்டஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.90% குறைவு (ரூ.2170654.87) |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்ததாரர் திரு.P.C.அந்தோணி மரிய கிரேட்டஸ் என்பவர் மதிப்பீட்டை விட 0.90% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று வேலை உத்தரவு வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு –**

1. அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்கு 10.05.2022 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பெற்றதில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை. மேலும் மறு ஒப்பந்தப்புள்ளி 31.05.2022 அன்று கோரப்பெற்றதில் ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றதாலும் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.90% குறைவாக இருப்பதாலும் ஒரு ஒப்பந்தப்புள்ளி என்ற நிலையிலும் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று வேலை த்தரவு வழங்கிட மாமன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.04/2022/இ1

**தீர்மானம் எண்.483 அனுமதிக்கப்பட்டது**

17. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16–ல் பரமேஸ்வரன் தெருவில் அம்ரூத் திட்டத்தின் கீழ் குடிநீர் குழாய் பதிக்கும் பணி முடிவுற்ற நிலையில் தெருவில் அங்காங்கு அலங்கார கற்கள் உடைந்து குண்டும் குழியுமாக உள்ளதால் பொதுமக்களுக்கு போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளதால் மேற்படி உடைத்த கற்கள் அப்புறப்படுத்தி விட்டு Concrete Patch work அமைத்திட ரூ.99,000/–க்கு செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணி செய்திட தயார் செய்யப்பட்ட ரூ.99,000/–க்கான மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.8577/2022/இ1

**தீர்மானம் எண்.484 அனுமதிக்கப்பட்டது**

18. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.30–ல் டெரிக் சந்திப்பு முதல் கோபாலபிள்ளை மருத்துவமனை வரை உள்ள ரோட்டில் கழிவு நீர் தேங்கி சுகாதார கேட்டினை ஏற்படுத்துவதால் JCB இயந்திரம் மூலம் மூடப்பட்ட சிலாப்பினை அகற்றி தூர் வாரிட ரூ.55,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ரூ.55,000/–க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.8264/2022/இ1

**தீர்மானம் எண்.485 அனுமதிக்கப்பட்டது**

19. இம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் செயல்பட்டு வருகின்ற நுண்ணுயிர் செயலாக்க மையத்தில் (MCC) Shredder எந்திரத்தில் ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்க்கொள்ளுதல் பணிக்கு (பொது நிதி 2021–2022) தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.25,00,000/–க்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன்படி 05.04.2022 அன்று (E–Tendering) முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் பின்வருமாறு.

| ஒப்பந்தப்புள்ளி விபரம் | | |
|---|---|---|
| 1 | திரு.T.அசோக்குமார்<br>ஒப்பந்தகாரர்<br>காட்டாத்துறை | (+) 0.12% மதிப்பீட்டை விட கூடுதல். |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டை விட (+) 0.12% கூடுதலாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.T.அசோக்குமார் என்பவரிடம் (Negoation) விலை குறைப்பு செய்து கேட்கப்பட்டது. அதன்படி ஒப்பந்தகாரர் சம்மதம் தெரிவித்து 06.06.2022 அன்று கொடுத்த சம்மத கடிதத்தில் மதிப்பீட்டை விட (–) 0.25% குறைத்து செய்து தர தெரிவித்ததன்படி, திருத்திய ஒப்பு நோக்குப்பட்டியல் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.T.அசோக்குமார்<br>ஒப்பந்தகாரர்<br>காட்டாத்துறை | மதிப்பீட்டை விட 0.25% குறைவு<br>(ரூ.2203078.50) |

வரப்பெற்றுள்ள ஒரு ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்ததாரர் திரு.T.அசோக்குமார் என்பவர் மதிப்பீட்டை விட 0.25% குறைவாக செய்து தர சம்மத கடிதம் (Negoation) கொடுத்துள்ளதால் அதனை ஏற்கவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்**

கோப்பு எண்.243/2021–2022

**தீர்மானம் எண்.486 அனுமதிக்கப்பட்டது**

20. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6–ல் பரமார்த்தலிங்கபுரம் சாலை மற்றும் மூன் லைட் சந்திப்பு சாலை மிகவும் குண்டும் குழியுமாக காணப்படுவதால் மேற்படி இடத்தினை சரி செய்திட அப்பகுதி மாமன்ற உறுப்பினர் மரு.கு.அனுஷா பிரைட் அவர்கள் கோரியதை தொடர்ந்து கள ஆய்வு செய்யப்பட்டதில் மேற்படி இடத்தில் Wet mx Macadam அமைத்து சமன்செய்திட ரூ.95,000/– செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே மேற்படி இடங்களில் உள்ள சாலைப்பகுதியினை சரி செய்திட தயார் செய்யப்பட்ட ரூ.95,000/– க்கான மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்.**

கோப்பு எண்.8579/2022/இ1

**தீர்மானம் எண்.487 அனுமதிக்கப்பட்டது**

21. நாகர்கோவில் மாநகராட்சியுடன் தெங்கம்புதூர் முதல் நிலை பேரூராட்சியானது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை அரசாணை நிலை எண்.84, நாள்.14.10.2021–ன் படி சேர்க்கப்பட்ட நிலையில் தெங்கம்புதூர் பேரூராட்சியில் மாத ஊதியம் ரூ.12,400/– என்ற வீதத்தில் ஒப்பந்த அடிப்படையில் திரு.S.தானியேல் ஓட்டுநராக பணிபுரிந்திட அனுமதித்திட ஆவன செய்திடும் படி தெங்கம்புதூர் முதல் நிலை பேரூராட்சியின் செயல் அலுவலர் அவர்களின் கடிதம் ந.க.எண்.329/2021/அ1, நாள்.11.01.2022 இல் கோரியதை தொடர்ந்து திரு.S.தானியேல் என்பவரை தொடர்ந்து நாகர்கோவில் மாநகராட்சியில் ஓட்டுநராக பணிபுரிந்திட அனுமதிக்கப்பட்டதுடன் திரு.S.தானியேல் என்பவருக்கு மாதம் ரூ.12,400/– வீதம் ஊதியமும் வழங்கப்பட்டு வந்தது.

மேலும் மாமன்ற மேயர் அவர்களின் நேரடி அறிவுரையின் படியும் மற்றும் திரு.S.தானியேல் (ஓட்டுநர்) என்பவர் 14.07.2022–ம் தேதிய மனுவில் மார்ச் 2022–ல் ஒப்பந்தம் முடிவு பெற்றுள்ளதாகவும் ஏப்ரல் 2022 முதல் தற்போது வரை ஊதியம் வழங்கப்படவில்லை என தெரிவித்துள்ளதாலும், மேலும் தெங்கம்புதூர் பேரூராட்சியில் பெற்று வந்த மாதம் ஊதியம் ரூ.12,400/–ஐ மாநகராட்சி மூலம் தொடர்ந்து வழங்க கேட்டும் அன்னார் சம்மதம் கடிதம் அளித்துள்ளார். மேலும் சுகாதார ஆய்வரின் அறிக்கையின்படி திரு.S.தானியேல் என்பவர் பிரிவு 15–ல் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறார் என்று 18.07.2022–ல் அறிக்கை செய்யப்பட்டுள்ளது.

மேலும் திரு.S.தானியேல் என்பவர் 2007 முதல் தற்போது வரை ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறார் என்பதுடன், அன்னார் சுமார் 15 வருடங்களுக்கு மேல் உள்ளாட்சி பணிக்கு பயன்படுத்தப்பட்டு வந்துள்ள விபரம் கோப்புகளின் வழி தெரியவருவதாலும் அன்னாரின் வாழ்வாதாரம் / நலன் கருதி நகராட்சி நிர்வாக இயக்குநரகம் / அரசால் அடுத்தக்கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் வரை திரு.S.தானியேல் என்பவரை தொடர்ந்து ஓட்டுநர் பணிக்காக நாகர்கோவில் மாநகராட்சியில் உபயோகப்படுத்திக்கொள்ளவும், அதற்கு பொது நிதியிலிருந்து மாதம் தோறும் ரூ.12,400/– (ரூபாய் பனிரெண்டாயிரத்து நானூறு மட்டும்) வீதம் ஊதியமாக வழங்கிடவும் மாமன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்**

கோப்பு எண்.38/2022/இ1

**தீர்மானம் எண்.488 அனுமதிக்கப்பட்டது**

22. நாகர்கோவில் மாநகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.13–ல் இராமவர்மன் புதுத்தெரு மற்றும் சோழராஜா கோவில் முன்பாக உள்ள பம்ப் ரூம்கள் மிகவும் பழுதடைந்துள்ளதாக குறிப்பிட்டு அவற்றினை இடித்து அப்புறப்படுத்திட மேற்படி வார்டின் மாமன்ற உறுப்பினர் திருமதி. V.ஆச்சியம்மாள் முருகன் என்பவரால் கோரிக்கை வைக்கப்பட்டதை தொடர்ந்து, கன ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் மேற்படி இரு பம்ப் ரூம்களும் ஆபத்தான நிலையில் உள்ளதாக குறிப்பிட்டு அவற்றின் மாமன்ற அனுமதி பெற்று இடித்து அப்புறப்படுத்திட நடவடிக்கை தொடரலாம் என உதவி பொறியாளரால் குறிப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி உபயோகமற்ற இரண்டு எண்கள் பம்ப் ரூம்களை மாநகராட்சி JCB உபகரணம் மூலம் பாதுகாப்பாக இடித்து அப்புறப்படுத்திட மாமன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்**

கோப்பு எண்.6364/2022/இ1

**தீர்மானம் எண்.489 அனுமதிக்கப்பட்டது**

23. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5–ல் பரமார்த்தலிங்கபுரம் காமராஜர் தெருவில் செல்லும் மழைநீர் வடிகால் ஓடையில் அமைந்துள்ள M.S. Grill உடைந்துவிட்டதால் அதனை சரி செய்து தரும்படி அப்பகுதி மாமன்ற உறுப்பினர் திரு.எஸ்.வி. உதயகுமார் அவர்களால் கோரப்பட்டுள்ளது. மேற்படி பழுதடைந்த M.S. Grill –ஐ சரி செய்து Concrete Patch work செய்திட ரூ.98,000/–க்கு செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி பணி செய்திட தயார் செய்யப்பட்ட ரூ.98,000/–க்கான மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்.**

கோப்பு எண்.8580/2022/இ1

**தீர்மானம் எண்.490 அனுமதிக்கப்பட்டது**

24. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13-ல் சோழராஜா கோவில் மற்றும் கொம்மண்டையம்மன் கோயில் தெருக்களில் 3-வது குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் குடிநீர் குழாய் பதிக்கும் பணி முடிவடைந்த நிலையில் குழாய் அமைக்க அப்புறப்படுத்தப்பட்டு பதிக்கப்பட்ட அலங்கார கற்கள் பொதுமக்கள் / போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளதாக குறிப்பிட்டு அவற்றினை சரி செய்து தரும்படி மேற்படி வார்டு மாமன்ற உறுப்பினரால் கோரப்பெற்றதை தொடர்ந்து கள ஆய்வு செய்யப்பட்டு, மேற்படி தெருக்களில் Concretepatch work செய்திட ரூ.99,000/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்**

கோப்பு எண்.6365/2022/இ1

**தீர்மானம் எண்.491 அனுமதிக்கப்பட்டது**

25. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.43-ல் மேலமறவன் குடியிருப்பு பகுதியில் பேவர்பிளாக் கற்கள் பதிக்கப்பட்ட சாலையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பிரமான / பகிர்மான குழாய்கள் பதித்த போது சேதமடைந்த சாலையினை சரி செய்திட அப்பகுதி மாமன்ற உறுப்பினர் திரு.ஆ.விஜயன் அவர்கள் கோரியதை தொடர்ந்து கள ஆய்வு செய்யப்பட்டதில், மேற்படி சாலையின் ஒரு பகுதியினை ஏற்கனவே மேற்படி சாலையிலிருந்து பெயர்த்து வைக்கப்பட்ட பழைய பேவர்பிளாக் கற்களை கொண்டும், மீதமுள்ள பகுதியில் புதிய பேவர் பிளாக் கற்களை கொண்டு பதித்து சாலைப்பணி செயலாக்கிட ரூ.3,30,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீடு தொகை ரூ.3,30,000/-க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்**

கோப்பு எண்.8656/2022/இ1

**தீர்மானம் எண்.492 அனுமதிக்கப்பட்டது**

26. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.47-ல் முத்தாரம்மன் கோயில் அருகில் உள்ள மழைநீர் வடிகால் ஓடையின் மீது சிறுபாலம் அமைத்து தரும்படி அப்பகுதி மாமன்ற உறுப்பினர் பா.ஜெனிதா மதன் அவர்கள் கோரியதை தொடர்ந்து கள ஆய்வு செய்யப்பட்டு ரூ.70,000/-க்கு மதிப்பீட்டில் சிறுபாலம் (Culvert) அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்.**

கோப்பு எண்.7721/2022/இ1

**தீர்மானம் எண்.493 அனுமதிக்கப்பட்டது**

27. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.38-ல் வலம்புரி வினாயகர் கோவில் தெருவில் அம்ரூத் குடிநீர் குழாய் அமைத்தல் பணி மேற்கொள்ளப்பட்டு பணி முடிவுற்ற நிலையில் அத்தெரு குண்டும் குழியுமாக மக்கள் நடப்பதற்கு மிகவும் சிரமமாக உள்ளதாக குறிப்பிட்டு சரி செய்து தரும் படி அப்பகுதி மாமன்ற உறுப்பினர் திரு.வி.சுப்பிரமணியம் அவர்களால் கோரப்பெற்றதை தொடர்ந்து மேற்படி தெருவில் CC patch work செய்திட ரூ.93,000/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்**

கோப்பு எண்.8658/2022/இ1

**தீர்மானம் எண்.494 அனுமதிக்கப்பட்டது**

28. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.27–ல் பெரிய தெருவில் அமைந்துள்ள ஆழ்குழாய் கிணற்றில் உள்ள குடிநீர் குழாய்கள் பழுதடைந்துள்ளதால் அவைகளை மாற்றி புதிதாக குடிநீர் குழாய் அமைத்திட அப்பகுதி மாமன்ற உறுப்பினர் திரு.K.கோபாலசுப்பிரமணியம் அவர்கள் கோரியதை தொடர்ந்து கள ஆய்வு செய்யப்பட்டு மேற்படி குடிநீர் குழாய் அமைத்திட ரூ.99,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ரூ.99,000/–க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்**

கோப்பு எண்.8657/2022/இ1

**தீர்மானம் எண்.495 அனுமதிக்கப்பட்டது**

29. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.48, பெரியவிளை கதவு எண்.35/E2 திரு.M.P.முத்துராஜன் பெயரில் 2619 சதுர அடி அளவிலான கட்டிடத்திற்கு ரூ.15,246/– சொத்துவரி அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டதினை வணிக பயன்பாட்டின் குடியிருப்பாக மாற்றி உள்ளதால் சொத்துவரியினை குடியிருப்புக்கு மாற்றி தரும்படி மனு கோரியுள்ளார்.

மேற்படி கட்டிடத்தை வருவாய் ஆய்வர் நேரில் ஆய்வு செய்து குடியிருப்பு பயன்பாட்டில் 01.04.2022 முதல் மாற்றம் செய்யலாம் என 30.06.2022 தேதியின்படி அறிக்கை சமர்ப்பித்துள்ளார். வணிக பயன்பாட்டின்படி சொத்துவரி அரையாண்டுக்கு ரூ.15,246/– ஆக உள்ளது. குடியிருப்பு பயன்பாட்டில் சொத்துவரி ரூ.3388/– ஆக சொத்துவரி கேட்பு தொகை குறைவு ஏற்படுவதால் வணிக பயன்பாட்டில் நிர்ணயம் செய்யப்பட்ட சொத்துவரி விதிப்பு எண்.150/048/00276–யை ரத்து செய்து குடியிருப்பு பயன்பாட்டின் அடிப்படையில் 01.04.2022 முதல் சொத்துவரி நிர்ணயம் செய்திட மாமன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்**

கோப்பு எண்.4556/2022/அ3

**தீர்மானம் எண்.496 அனுமதிக்கப்பட்டது**

30. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8–ல் கிருஷ்ணன் கோவில் அரசு நடுநிலைப்பள்ளி அருகில் இசக்கி அம்மன் கோவில் முன்பு உள்ள மழைநீர் ஓடை பழுதடைந்து பள்ளிக்கூட சுற்று சுவர் மற்றும் கோவில் முன்புற Shed உடைந்து விழும் அபாய நிலையில் இருப்பதால் அப்பகுதி வடிகால் ஓடையினை சரி செய்திட ரூ.99000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ரூ.99000/–க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்.**

கோப்பு எண்.8262/2022/இ1

**தீர்மானம் எண்.497 அனுமதிக்கப்பட்டது**

31. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8, அருகுவிளை தெற்கு தெருவில் உள்ள Paver block பணிகள் அம்ரூத் குடிநீர் திட்டப்பணி செயலாக்கத்தின் பொருட்டு உடைத்து எடுக்கப்பட்ட அலங்கார கற்கள் தெருவில் ஆங்காங்கு உள்ளது. அவற்றினை அப்புறப்படுத்தி சிமெண்ட் தளம் அமைத்திட மேற்படி வார்டு மாமன்ற உறுப்பினரால் கோரப்பெற்றதை தொடர்ந்து கள ஆய்வு செய்யப்பட்டு சிமெண்ட் தளம் அமைத்திட ரூ.99000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீட்டு தொகை ரூ.99000/–க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்**

கோப்பு எண். 8578/2022/இ1

**தீர்மானம் எண்.498 அனுமதிக்கப்பட்டது**

32. நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான கடைகளில் ஏலம் போகாத கீழ்காணும் கடைகளுக்கு தொடர்ச்சியாக பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 20-7-2022 அன்று வரப்பெற்ற மறு ஒப்பந்தப்புள்ளியின் விபர நடவடிக்கைகள் மாமன்ற பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | உரிம இனங்களின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தவர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி தொகை (மாத வாடகை அடிப்படையில்) |
|---|---|---|---|
| 01 | வடசேரி ஆம்னி பேருந்து நிலையம் கடை எண் – 3 | திரு. V. பழனிவேல் ராஜன் | 25000/- |
| 02 | கோட்டார் கூழக்கடை எண் – 1 | திரு. N. இராஜகுமார் | 11000/- |
| 03 | அண்ணா பேருந்து நிலையத்தில் பயணிகள் அமர்வதற்கான குளிரூட்டப்பட்ட அறை (AC ROOM) பராமரிப்பு மற்றும் அதன் அருகில் சிறிய அளவில் தட்டில் வைத்து தின்பண்டங்கள் விற்பனை செய்திடும் உரிமம் | எவரும் கலந்து கொள்ளவில்லை | - |
| 04 | அண்ணா பேருந்து நிலையத்தில் நவீன கட்டண கழிவறையின் வடக்கு பக்கம் உள்ள 10' X 10 ' சதுர அடியில் உள்ள காலியிடம் | எவரும் கலந்து கொள்ளவில்லை | - |
| 05 | வடசேரி கனகமூலம் சந்தை கடைகள்-14, 15, 19, 20, 21, 22, 23, 24, 26, 27, 30, 31, 34, 35, 38, 39, 42, 46, 47, 50, 52. 55, 56, 58, 66. 67, 70. 71. 74. 78, 83, 86, 90, 91, 93, 94, 95, 96. 97, 98, 99, 101, 102, 103, 105, 106, 107, 108, 110, 111, 112, 113, 114, 115, 116, 118, 122, 123, 130, 131, 132. 136, 137, 138, 139, 143, 144, 149, 150, 151, 153, 154, 155, 156, 157, 158, 161, 162, 163, 166, 168, 169. 171. 172, 173, 174, 175, 178, 179, 183, 184, 185, 186, 187, 189, 190, 191, 192, 193, 196, 198, 199, 200, 202, 203, 204, 205, 206, 221, 222, 223, 226, 227, 228, 249, 250, 251, 252 மற்றும் 253 | எவரும் கலந்து கொள்ளவில்லை | - |

| | | | |
|---|---|---|---|
| 06 | சரலூர் மீன் சந்தை உட்புறம் அமைந்துள்ள கடை எண் – 16 | எவரும் கலந்து கொள்ளவில்லை | – |
| 07 | **வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையம் Phase I கடை எண்– 2 மற்றும் 4** | எவரும் கலந்து கொள்ளவில்லை | – |
| 08 | வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையம் Phase II கடைகள் 15 மற்றும் 16 | எவரும் கலந்து கொள்ளவில்லை | – |
| 09 | பெதஸ்தா வணிக வளாகம் கடை எண் – 29 | திரு. பாபு செல்லையா | 4500/– |
| 10 | பெதஸ்தா வணிக வளாகம் கடை எண்கள் 20, மற்றும் 47 (ஹால் மற்றும்) | எவரும் கலந்து கொள்ளவில்லை | – |
| 11 | **நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையத்தில் உள்பக்கம் மாநகராட்சியால் சுட்டிக்காட்டப்படும் இடத்தில் மட்டும் வைத்து 8 நபர்கள் மட்டும் தட்டில் வைத்து பூ வியாபாரம் செய்யும் உரிமம்** | எவரும் கலந்து கொள்ளவில்லை | – |

மேற்கண்ட பொது ஏல விபரங்கள் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு –</u>

1. வரிசை எண்கள் 1 முதல் 11 வரையிலாக உள்ள உரிமங்களுக்கு பொது ஏலத்தில் கலந்து கொள்ள யாரும் முன்வரவில்லை.
2. வரிசை எண்கள் 3, 4, 5, 6, 7, 8, 10 மற்றும் 11–ல் கண்டுள்ள உரிம இனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் வரப்பெறாததால் மேற்படி உரிம இனங்களுக்கு தொடர்ச்சியாக தொடர் நாட்களில் மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.
3. வரிசை எண்கள் 1, 2 மற்றும் 9–ல் கண்டுள்ள இனங்களுக்கு குறைந்தபட்ச மாத வாடகை வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற மாத வாடகையினைவிட கூடுதல் மாத வாடகைக்கு போகும் என கருதி மேற்படி இனங்களுக்கு தொடர்ச்சியாக தொடர் நாட்களில் மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.

மேற்கண்டுள்ளபடி உள்ள உரிம இனங்களுக்கு அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதியுடன் மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிட நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மாமன்றம் அங்கீகாரம் அளிக்கலாம்.

கோப்பு எண்.03525/2022/அ6

**தீர்மானம் எண்.499 அனுமதிக்கப்பட்டது**

33. நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான கோட்டார் கூழக்கடை கடை எண் 7–ஐ திரு. முருகேசன் என்பவர் உரிமம் எடுத்து நடத்தி வந்தார். அன்னார் 17–08–2021 அன்று காலமாகிவிட்டதால் மேற்படி கடையினை திரும்ப மாநகராட்சி வசம் ஒப்படைப்பு செய்வதாகவும், அன்னார் மாநகராட்சிக்கு செலுத்திய வைப்புத் தொகையினை திரும்ப வழங்கவும் என திரு. முருகேசன் என்பவரின் மனைவி திருமதி. R. கிருஷ்ணவேணி என்பவர் தனது 25–05–2022 தேதியிட்ட விண்ணபத்தின் மூலம் கோரியிருந்தார்.

மேலும் இம்மாநகராட்சிக்கு சொந்தமான பெதஸ்தா வணிக வளாகத்தில் கடை எண் – 21–ஐ உரிமம் எடுத்து நடத்தி வந்ததாகவும், மேற்படி கடையில் கடந்த ஏப்ரல் 2021 முதல் ஒரு வருடமாக கடையின் முன்பு சாக்கடை நீர் கசிந்து பொருட்கள் சேதமடைவதாலும், கடையின் முன் சாக்கடை நீர் தேங்கி நின்றதால் வாடிக்கையாளர்கள் யாரும் கடைக்கு வரவில்லை என்றும், அதனால் மேற்படி கடையினை திறக்க முடியாமல் உள்ளதால் தனக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டு வருகிறது என்றும், அதனால் மேற்படி கடையினை மாநகராட்சி வசம் திரும்ப ஒப்படைப்பு செய்வதாகவும், தான் செலுத்திய வைப்புத் தொகையினை திரும்ப வழங்க கேட்டு திரு. C. இராமநாதபிள்ளை என்பவர் தனது 27–06–2022–ஆம் தேதியிட்ட விண்ணபத்தின் மூலம் கோரியுள்ளார்.

மேற்காணும் இரு கடைகளுக்கும் சம்மந்தப்பட்ட மாநகராட்சி வருவாய் ஆய்வாளர் தனது அறிக்கையில் மேற்படி இரு கடைகளையும் பூட்டி சாவியினை மாநகராட்சியில் ஒப்படைத்துள்ளதாகவும், மேலும் மேற்படி கடைகளுக்கு நிலுவை உள்ள மாத வாடகையினை உரிமதாரர்கள் செலுத்திய வைப்புத் தொகையில் இருந்து ஈடு செய்துவிட்டு மீதமுள்ள தொகையினை திரும்ப வழங்கலாம் என்றும் மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிட நடவடிக்கை மேற்கொள்ளலாம் என தெரிவித்துள்ளார்.

மேலும் இம்மாநகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள சுரங்கபாதையின் மேல் அமைந்துள்ள காலியிடத்திற்கு உரிமம் எடுத்து நடத்தி வருவதாகவும், மேற்படி கடையின் மூன்றாண்டு உரிமம் 30–09–2022 உடன் முடிவடைவதாகவும், மேற்படி கடையினை தொடர்ந்து நடத்த இயலாத காரணத்தினால் 30–09–2022–உடன் மேற்படி கடையினை திரும்ப மாநகராட்சி வசம் ஒப்படைப்பு செய்வதாக தெரிவித்து திரு. திருமால் என்பவர் தனது 12–07–2022 தேதியிட்ட விண்ணப்பம் மூலம் தெரிவித்துள்ளார்.

மேற்காணும் கடைக்கு சம்மந்தப்பட்ட வருவாய் ஆய்வாளர் தனது அறிக்கையில் மேற்படி கடைக்கு 9 ஆண்டுகள் முடிவடையாத நிலையில் மாநகராட்சி வசம் திரும்ப ஒப்படைக்க வந்துள்ளதால் மேற்படி கடைக்கு செப்டம்பர் 2022 மாதம் வரையிலான மாத வாடகை தொகையினை செலுத்திடவும், பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி உரிமம் ஒப்படைக்கும் வரை உள்ள மாத வாடகை மற்றும் இதனால் ஏற்படும் சகல நிதியிழப்பிற்கும் உரிமதாரர் பொறுப்பு எனவும், மேலும் மேற்படி கடைக்கு செலுத்தப்பட்ட வைப்புத் தொகையினை திரும்ப வழங்காமல் நிறுத்தி வைத்திடவும், அரசாணை மற்றும் பொது ஏலம் நிபந்தனைகள்படி மாமன்ற அனுமதி பெற்று மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படாத வகையில் முறையான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் என தெரிவித்துள்ளார்..

மேலும் இம்மாநகராட்சிக்கு சொந்தமான கரியமாணிக்கபுரம் வளாகத்தில் உள்ள கடை எண் 3–ஐ உரிமம் எடுத்து நடத்தி வந்ததாகவும், தற்போது உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் மேற்படி கடையினை தொடர்ந்து நடத்த இயலாத காரணத்தினால் மேற்படி கடையினை திரும்ப மாநகராட்சி வசம் ஒப்படைப்பு செய்வதாகவும், தான் செலுத்திய வைப்புத் தொகையினை திரும்ப வழங்க திருமதி. M. கிருஷ்ணகுமாரி என்பவர் தனது 13–07–2022–ஆம் தேதியிட்ட விண்ணபத்தின் மூலம் கோரியுள்ளார்.

மேற்காணும் கடைக்கு சம்மந்தப்பட்ட வருவாய் ஆய்வாளர் தனது அறிக்கையில் மேற்படி கடைக்கு 9 ஆண்டுகள் முடிவடையாத நிலையில் மாநகராட்சி வசம் திரும்ப ஒப்படைத்துள்ளார் என்றும் மேற்படி கடைக்கு ஜூலை 2022 மாதம் வரையிலான மாத வாடகை தொகையினை

செலுத்திடவும், பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி உரிமம் ஒப்படைக்கும் வரை உள்ள மாத வாடகை மற்றும் இதனால் ஏற்படும் சகல நிதியிழப்பிற்கும் உரிமதாரர் பொறுப்பு எனவும், மேலும் மேற்படி கடைக்கு செலுத்தப்பட்ட வைப்புத் தொகையினை திரும்ப வழங்காமல் நிறுத்தி வைத்திடவும், அரசாணை மற்றும் பொது ஏலம் நிபந்தனைகள்படி மாமன்ற அனுமதி பெற்று மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படாத வகையில் முறையான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் என தெரிவித்துள்ளார்.

எனவே வருவாய் ஆய்வாளர்களின் அறிக்கையின்படி மாநகராட்சிக்கு சொந்தமான கோட்டார் கூழக்கடை கடை எண் 7, பெதஸ்தா வணிக வளாகம் கடை எண் 21, அண்ணா பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள சுரங்கபாதையின் மேல்புரத்தில் உள்ள காலியிடம் மற்றும் கரியமாணிக்கபுரம் கடை எண் 3 ஆகிய உரிம இனங்களுக்கு மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிடவும், அதற்காகும் விளம்பர செலவினத்திற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – 1. அனுமதிக்கலாம்.

2. மேற்கண்டுள்ளபடி உள்ள உரிம இனங்களுக்கு அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதியுடன் மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிட நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மாமன்றம் அங்கீகாரம் அளிக்கலாம்.

கோப்பு எண்.6041/2022/அ6

**தீர்மானம் எண்.500 அனுமதிக்கப்பட்டது**

34. நாகர்கோவில் மாநகராட்சி 2022–2023 நிதி ஆண்டிற்கு அலுவலக தேவைக்காக எழுதுபொருட்கள், படிவங்கள், பதிவேடுகள் வாங்குவதற்காக கூட்டுறவு அச்சகத்திலி விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட கூட்டுறவு அச்சகங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

1. சங்கு நகர் எழுதுபொருட்கள் அச்சடிப்பு
2. சென்னை பிரிண்டிங் மற்றும் ஸ்டேஷனரி தொழில் கூட்டுறவு அச்சகம் லிட்
3. தூத்துக்குடி மாவட்ட எழுது பொருட்கள் விநியோகஸ்தர்கள்.

| வ. எண் | எழுது பொருட்கள் விபரம் | சங்கு நகர் அச்சகம் | சென்னை அச்சகம் | தூத்துக்குடி | எண்ணம் | விலை |
|---|---|---|---|---|---|---|
| 1 | D&O Register | 330 | 278+18% GST | – | 32 | 8896 |
| 2 | பொது ஏல பதிவேடு | 494 | 418+18% GST | – | – | – |
| 3 | D.R | 350 | 295+18% GST | – | 10 | 2950 |
| 4 | P.R | 494 | 418+18% GST | – | 30 | 12540 |
| 5 | Advance Register | 266 | 224+18% GST | – | 10 | 2240 |
| 6 | Payment Book | 650 | 546+18% GST | – | 5 | 2730 |
| 7 | Cash Book | 494 | 418+18% GST | – | 5 | 2090 |
| 8 | Receipt Book | 580 | 490+18% GST | – | 5 | 2450 |
| 9 | Tender Register 50 page | 260 | 224+18% GST | – | 20 | 4480 |
| 10 | M.L. Register | 494 | 418+18% GST | – | 110 | 45980 |
| 11 | ADR | 780 | 659+18% GST | – | 2 | 1318 |
| 12 | LOG Book | 320 | 270+18% GST | – | 200 | 54000 |
| 13 | Road Ledger | 494 | 418+18% GST | – | 1 | 418 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 14 | Attendance | 558 | 470+18% GST | – | 10 | 4700 |
| 15 | C.L.Register | 266 | 224+18% GST | – | 10 | 2240 |
| 16 | B.C.Diary | 625 | 528+18% GST | – | – | – |
| 17 | 200 Page Plain Register | 290 | 245+18% GST | – | – | – |
| 18 | 100 Page Plain Register | 168 | 142+18% GST | – | – | – |
| 19 | Ex. Copy Register | 266 | 224+18% GST | – | 10 | 2240 |
| 20 | M.Book 25 Page | 74 | 62+18% GST | – | 100 | 6200 |
| 21 | M.Book 50 Page | 137 | 115+18% GST | – | 100 | 11500 |
| 22 | M.Book 100 Page | 150 | 127+18% GST | – | 50 | 6350 |
| 23 | Movement Register | 494 | 418+18% GST | – | 1 | 418 |
| 24 | Investment Register | 494 | 418+18% GST | – | 1 | 418 |
| 25 | Bank Transfer Register | 337 | 285+18% GST | – | 1 | 285 |
| 26 | Writing Paper | 1636 | 1446+12% GST | – | 1q | 1446 |
| 27 | Office Cover | 210 | 177+18% GST | – | – | – |
| 28 | RTI Register | 494 | 418+18% GST | – | 2 | 988 |
| 29 | Forms | – | – | – | – | – |
| 30 | Child Name Registration | – | – | – | – | – |
| 31 | A4 Size Paper 80 gsm | 365 | 305+12% GST | 315 | 500 | 152500 |
| 32 | A4 Size Paper 75 gsm Blue | 490 | 436+12% GST | 385 | 250 | 109000 |
| 33 | A4 Size Paper 80 gsm Green | 490 | 436+12% GST | 385 | – | – |
| 34 | A4 Size Paper 75 gsm Red | 490 | 436+12% GST | 385 | – | – |
| 35 | PR Running Note file (50p) | 266 | 224+18% GST | – | – | – |
| 36 | Legal size paper 80 gsm | 435 | 435+12% GST | 390 | 100 | 43500 |
| | | | | | **மொத்தம்** | **481877+ GST** |

மேற்படி கிடைக்கப்பெற்ற விலைப்புள்ளிகளை தவிர்த்து மேலகரம் கூட்டுறவு சங்கத்திலிருந்து கடிதம் மட்டுமே வரப்பெற்றுள்ளது. கிடைக்கப்பெற்ற விலைப்புள்ளிகளின் அடிப்படையில் தூத்துக்குடி மாவட்ட எழுதுப்பொருட்கள் விநியோகஸ்தர்கள் (A4, Legal, Color paper) குறைந்த விலைப்புள்ளி சமர்பித்துள்ளனர் அதுபோல சென்னை கூட்டுறவு சங்கத்தில் பதிவேடுகளுக்கு குறைந்த விலைப்புள்ளி சமர்பித்துள்ளனர்.

நாகர்கோவில் மாநகராட்சி 2022–2023 நிதியாண்டிற்கு தேவையான பதிவேடுகளை சென்னை தொழிலாளர் தொழில் கூட்டுறவு சங்கத்திலிருந்தும், பேப்பர் வகைகளை தூத்துக்குடி மாவட்ட எழுது பொருட்கள் விநியோகஸ்தர்களிடமிருந்தும் தற்போது ரூ.481877 +GST –க்கு வாங்கிக்கொள்ள மன்றத்தின் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு** – 1. அங்கீகரிக்கலாம்

2. மாமன்ற தீர்மானம் எண்.107 நாள்.25.01.2022–ல் மேற்படி எழுது பொருட்கள் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.15,00,000/–க்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.

கோப்பு எண்.00316/2022/பி2

**தீர்மானம் எண்.501 அனுமதிக்கப்பட்டது**

35. நாகர்கோவில் மாநகராட்சி பகுதிக்குட்பட்ட 52 வார்டுகளிலும் தெரு நாய்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்து உணவு வழங்கி வெறி நாய் தடுப்பூசி போட்டு பிடித்த இடத்தில் விடுவதற்கு நாய் ஒன்றுக்கு ரூ.700/- என நிர்ணயம் செய்து மத்திய அரசின் விலங்குகள் நல வாரியத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஜீவ காருண்யா விலங்குகள் நல சாரிடபுள் டிரஸ்ட் நிறுவனத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் ஒப்பந்தம் வழங்கி தெரு நாய்களை பிடித்து கருத்தடை செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்கண்ட ஜீவ காருண்யா டிரஸ்ட்-க்கு 09.07.2021 முதல் 08.07.2022 வரை ஓராண்டிற்கு உரிய நிபந்தனைகளுடன் ஒப்பந்தம் நீட்டித்து வழங்கி உத்தரவு வழங்கப்பட்டது.

தற்போது மேற்கண்ட நிறுவனத்தின் மேனேஜிங் டிரஸ்ட்டி ஜீவ காருண்யா விலங்குகள் நல பாதுகாப்பு அறக்கட்டளையின் இயக்குநருக்கு உடல் நலம் சரியில்லாமல் மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வந்தமையால் குறிப்பிட்ட காலத்திற்கு தம்மால் ஒப்பந்தத்தை புதுப்பிப்பதற்கான பணிகளை மேற்கொள்ள இயலவில்லை எனவும், எனவே தமது நிலையினை கருத்தில் கொண்டு ஒப்பந்தத்தினை நீட்டித்து வழங்க கேட்டு 02.08.2022-ல் கடிதம் அனுப்பியுள்ளார்கள்.

மேலும் மாநகராட்சிக்குட்பட்ட 52 வார்டுகளிலும் தெரு நாய்களால் தொல்லையாக உள்ளது என பொதுமக்களிடமிருந்து புகார்கள் பெறப்பட்டு வருவதாலும், துப்புரவு ஆய்வாளர்களால் மாநகர பகுதிகளில் தெரு நாய்களின் நடமாட்டம் கூடுதலாக உள்ளது என்பதால் நாய்களை பிடித்து கருத்தடை செய்யும் பணியினை தொடர்ந்து செய்திட அறிக்கை சமர்ப்பித்துள்ளார்கள்.

எனவே, பொதுமக்கள் மற்றும் வாகன போக்குவரத்திற்கு இடையூறாக சாலைகளில் சுற்றித்திரியும் தெருநாய்கள் பிடித்து கருத்தடை செய்து (Animal Birth Control) அதற்கான உணவு வழங்கி, வெறிநாய் தடுப்பு ஊசி போட்டு, பிடித்த இடத்தில் கொண்டு விடுவதற்கான கட்டணம் நாய் 1-க்கு ரூ.700/- விகிதத்தில் 09.07.2022 முதல் 08.07.2023 வரை ஓர் ஆண்டிற்கு உரிய நிபந்தனைகளுடன் ஜீவ காருண்யா விலங்குகள் நல சாரிடபுள் டிரஸ்ட் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் நீட்டித்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு -**

1. அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட நிறுவனத்திற்கு 09.07.2022 முதல் 08.07.2023 வரை ஓராண்டிற்கு தெரு நாய்கள் கருத்தடை செய்ய (Animal Birth Control) உரிய நிபந்தனைகளுடன் ஒப்பந்தத்தினை நீட்டித்து ஜீவ காருண்யா விலங்குகள் நல சாரிட்டபுள் டிரஸ்ட் நிறுவனத்திற்கு அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.5367/2019/எச்1

**தீர்மானம் எண்.502 அனுமதிக்கப்பட்டது**

36. இம் மாநகராட்சியில் மாநில பேரிடர் மேலாண்மை நிதி (SDRF -2021-2022)-ன் கீழ் இம்மாநகராட்சிக்குட்பட்ட பள்ளவிளை சானல்கரை பகுதியில் தார்சாலை பராமரிப்பு பணிக்கு ரூ.25,00,000/-க்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் படி கடந்த 06.05.2022 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.I.கேட்சன்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.05% குறைவு<br>ரூ.2149490.00/- |
| 2 | திரு.M.வெற்றிவேலன்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 3.78% கூடுதல்<br>ரூ.2231941.00/- |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்ததாரர் திரு.I.கேட்சன் என்பவர் மதிப்பீட்டை விட 0.05% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்கவும் மேற்படி பணி அரசின் திட்டப்பணி என்பதாலும் மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்**

மதிப்பீட்டு எண்.184/2021–2022

**தீர்மானம் எண்.503 அனுமதிக்கப்பட்டது**

37. நாகர்கோவில் மாநகராட்சி பகுதியில் 15–வது மத்திய நிதிக்குழு மானியம் Tied Grand 2021–2022 ஆண்டுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியின் கீழ் இம்மாநகராட்சி பகுதியில் உள்ள (MCC) 5 எண்ணம் 10HP Shredder Machine வாங்குவதற்கு ரூ.22,50,000/–க்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் படி கடந்த 31.05.2022 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | Kovai Engineering work Pvt.Ltd நிறுவனம் | மதிப்பீட்டை விட 20.38% குறைவு ரூ.1785000.00/– |
| 2 | Southern Solid waste Management service நிறுவனம் | மதிப்பீட்டை விட 11.90% குறைவு ரூ.1975000.00/– |
| 3 | திரு.T.அசோக்குமார் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 11.02% குறைவு ரூ.1995000.00/– |
| 4 | Dimand Art cutting and Stickers நிறுவனம் | மதிப்பீட்டை விட 0.26% அதிகம் ரூ.2248000.00/– |
| 5 | Sri Dharshini Traders நிறுவனம் | மதிப்பீட்டை விட0.32% அதிகம் ரூ.2249250.00/– |

பெறப்பட்ட ஐந்து ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்ததாரர் Kovai Engineering work Pvt.Ltd நிறுவனம் மதிப்பீட்டை விட 20.38% குறைவாக கொடுத்துள்ளதால் கூடுதல் வைப்புத்தொகை ரூ.228460/–ஐ செலுத்திய பின்னர் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்காக.

**அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்**

மதிப்பீட்டு எண்.22/2022–2023

**தீர்மானம் எண்.504 அனுமதிக்கப்பட்டது**

38. மூலதன மானிய உட்கட்டமைப்பு நிதி (CGF –2021–2022)–ன் கீழ் ரூ.200.00 இலட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி வேலை உத்தரவு வழங்கும் நிலையில் உள்ளது. மேற்படி இடத்தில் நகர்நல அலுவலர் மற்றும் ஆணையர் பொறியாளரால் பார்வையிடப்பட்டு அதில் தற்போது இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையத்தினை மாற்றம் செய்யாமல் அதன் அருகில் மாற்றம் செய்ய அறிவுரை வழங்கப்பட்டது. எனவே 1. சத்துணவு மைய எண்.43/09 கிருஷ்ணன்கோவில், 2. சுகாதார ஆய்வாளர் அலுவலக கட்டிடம், 3. நாய் கூடம் (ABC Centre) ஆகிய கட்டிடங்களை இடித்து மாற்றி அப்பகுதியில் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டிடம் கட்ட மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.12108/2021/இ3

**தீர்மானம் எண்.505 அனுமதிக்கப்பட்டது**

39. நாகர்கோவில் மாநகராட்சி அலுவலக வளாகத்தினுள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பொது சுகாதாரப் பிரிவின் பழைய வாகனங்கள் மற்றும் தினசரி இயக்கப்பட்டு வரும் குப்பை லாரிகள் ஆகியன சுகாதார சீர்கேட்டை உருவாக்கும் என்பதால் மேயர் அவர்களின் நேரடி அறிவுரையின் பேரிலும் அலுவலக வளாகம் சுத்தமாக பேணப்படவேண்டும் என்ற நோக்கிலும் மேற்படி வாகனங்களை இந்துக் கல்லூரியின் அருகாமையில் அமைந்துள்ள இம் மாநகராட்சிக்கு சொந்தமான "ஆதரவற்றோர் மைய வளாகத்தில்" நிறுத்தவும் மேற்படி வளாகத்திலுள்ள மண் தரையினை ஜே.சி.பி. இயந்திரம் மூலம் சமன் செய்யவும்.

மாநகராட்சி அலுவலக வளாகத்தினுள் இருசக்கர வாகனங்கள் நிறுத்துவதற்கு ஏதுவாக அறிவிப்பு பலகைகள் வைத்தல் மேலும் ஆணையர், மேயர், துணை மேயர், பொறியாளர் ஆகியோர்கள் வாகனங்கள் தனித் தனியாக நிறுத்த மஞ்சள் நிற வரைகோடு இடுவது, மேயர், துணை மேயர் அறைகளில் குளிர்சாதன வசதி செய்தல் மேலும் துணை மேயர்க்கான மாமன்ற அறையின் மேற்குப் பகுதியில் அலுமினிய பேப்ரிக்கேசன் மூலம் அறை அமைத்து சுவர் மற்றும் தரைப் பகுதிகளில் பேப்பர் பணிகள் மேற்கொள்ளுதல், பெயர் பலகை அமைத்தல், மின்வசதி செய்தல் போன்ற பணிகள் செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.3,30,000/-ற்கும், பொது நிதியில் செலவினம் மேற்கொள்ளவும், ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்**

கோப்பு எண்.5705/2022/இ1

**தீர்மானம் எண்.506 அனுமதிக்கப்பட்டது**

40. நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான கடைகளில் ஏலம் போகாத கீழ்காணும் கடைகளுக்கு தொடர்ச்சியாக தொடர் நாட்களில் மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 01-08-2022, 05-08-2022 மற்றும் 10-08-2022 தேதிகளில் மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மாமன்ற பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ, எண் | உரிம இனங்களின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தவர் பெயர் | 01.08.2022 ஒப்பந்தப் புள்ளி தொகை | 05.08.2022 ஒப்பந்தப் புள்ளி தொகை | 10.08.2022 ஒப்பந்தப் புள்ளி தொகை |
|---|---|---|---|---|---|
| 01 | வடசேரி ஆம்னி பேருந்து நிலையம் கடை எண் – 3 | திரு. V. பழனிவேல் ராஜன் | 25000/ | 25000/- | - |
| 02 | கோட்டார் கூழக்கடை எண் – 1 | திரு. இராஜகுமார் | 12000/- | 13000/- | 13200/- |
| 03 | அண்ணா பேருந்து நிலையத்தில் பயணிகள் அமர்வதற்கான குளிரூட்டப்பட்ட அறை (AC ROOM) பராமரிப்பு மற்றும் அதன் அருகில் சிறிய அளவில் தட்டில் | எவரும் கலந்து கொள்ளவில்லை | - | - | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வைத்து தின்பண்டங்கள் விற்பனை செய்திடும் உரிமம் | | | | |
| 04 | அண்ணா பேருந்து நிலையத்தில் நவீன கட்டண கழிவறையின் வடக்கு பக்கம் உள்ள 10' X 10 ' சதுர அடியில் உள்ள காலியிடம் | எவரும் கலந்து கொள்ளவில்லை | – | – | – |
| 05 | வடசேரி கனகமூலம் சந்தை கடை எண்கள் – 14, 15, 19, 20, 21, 22, 23, 24, 26, 27, 30, 31, 34, 35, 38, 39, 42, 46, 47, 50, 52. 55, 56, 58, 66. 67, 70. 71. 74. 78, 83, 86, 90, 91, 93, 94, 95, 96. 97, 98, 99, 101, 102, 103, 105, 106, 107, 108, 110, 111, 112, 113, 114, 115, 116, 118, 122, 123, 130, 131, 132. 136, 137, 138, 139, 143, 144, 149, 150, 151, 153, 154, 155, 156, 157, 158, 161, 162, 163, 166, 168, 169. 171. 172, 173, 174, 175, 178, 179, 183, 184, 185, 186, 187, 189, 190, 191, 192, 193, 196, 198, 199, 200, 202, 203, 204, 205, 206, 221, 222, 223, 226, 227, 228, 249, 250, 251, 252 மற்றும் 253 | எவரும் கலந்து கொள்ளவில்லை | – | – | – |
| 06 | சரலூர் மீன் சந்தை உட்புறம் அமைந்துள்ள கடை எண் – 16 | எவரும் கலந்து கொள்ளவில்லை | – | – | – |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 07 | **வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையம் Phase I கடை எண்– 2 மற்றும் 4** | எவரும் கலந்து கொள்ளவில்லை | – | – | – |
| 08 | வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையம் Phase II கடைகள் 15 மற்றும் 16 | எவரும் கலந்து கொள்ளவில்லை | – | – | – |
| 09 | பெதஸ்தா வணிக வளாகம் கடை எண்கள் 20 மற்றும் 47 (ஹால் மற்றும்) | எவரும் கலந்து கொள்ளவில்லை | – | – | – |
| 10 | பெதஸ்தா வணிக வளாகம் கடை எண்– 29 | திரு. C. பாபு | 6000/– | 6000/– | – |
| | | திரு. M. டேனியல் | 5500/– | – | – |
| 11 | நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையத்தில் உள்பக்கம் மாநகராட்சியால் சுட்டிக்காட்டப்படும் இடத்தில் மட்டும் வைத்து 8 நபர்கள் மட்டும் தட்டில் வைத்து பூ வியாபாரம் செய்யும் உரிமம் | எவரும் கலந்து கொள்ளவில்லை | – | – | – |

<u>அலுவலக குறிப்பு –</u>

1. வரிசை எண்கள் 1 முதல் 11 வரையிலும் உள்ள உரிமங்களுக்கு பொது ஏலத்தில் கலந்து கொள்ள யாரும் முன்வரவில்லை.
2. வரிசை எண்கள் 1 மற்றும் 2–ல் கண்டுள்ள இனங்களுக்கு குறைந்தபட்ச மாத வாடகை வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற மாத வாடகையினைவிட கூடுதல் மாத வாடகைக்கு போகும் என கருதி மேற்படி இனங்களுக்கு தொடர்ச்சியாக தொடர் நாட்களில் மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.
3. வரிசை எண் 10–இல் உள்ள உரிமத்திற்கு திரு, பாபு செல்லையா என்பவர் 05–08–2022 அன்று நடபெற்ற ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் உயர்ந்தபட்ச மாத வாடகை ரூ 6000/– என கோரியிருந்தார். மேற்படி கடைக்கு முந்தைய உரிமதாரர் அனுபவித்து வந்த மாத 6000/–க்கு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளதால் மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏதும் இல்லை. எனவே உயர்ந்தபட்ச மாத வாடகை ரூ 6000/– என கோரிய திரு. பாபு செல்லையா என்பவருக்கு உரிமம் வழங்கலாம்.

4. வரிசை எண்கள் 3, 4, 5, 6, 7, 8, 9, மற்றும் 11–ல் கண்டுள்ள உரிம இனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் வரப்பெறாததால் மேற்படி உரிம இனங்களுக்கு தொடர்ச்சியாக தொடர் நாட்களில் மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.

மேற்கண்டுள்ளபடி உரிமம் ஒப்படைக்க இறுதி செய்யப்பட்ட கடைக்கு நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டு கடையினை ஒப்படைக்க அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதியுடன் உரிமம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.03525/2022/அ6

**தீர்மானம் எண்.507 அனுமதிக்கப்பட்டது**

41. நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட ஆண்டு குத்தகை உரிம இனங்களுக்கு 2022–2023–ஆம் ஆண்டு முதல் 2024–2025 வரை உள்ள காலத்திற்கு குத்தகை உரிம இனங்களை அனுபவிக்கும் உரிமத்திற்கு அரசாணை எண்.181 (நகராட்சி நிர்வாக குடிநீர் வழங்கு துறை) நாள் 19.09.2008–ன்படி 10.08.2022 அன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ, எண் | உரிம இனங்களின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தவர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி தொகை | பொது ஏலம் தொகை | மூன்று ஆண்டு சராசரி தொகை |
|---|---|---|---|---|---|
| 01 | தெங்கம்புதூர் வடக்கு அஞ்சுகுடியிருப்பு குடிநீர் கீழ்நிலை தொட்டி வளாகத்தில் உள்ள தென்னை மரம் 18 எண்ணம் மற்றும் கமுகு மரம் 7 எண்ணம் மரங்களின் மேலாதாயம் அனுபவிக்கும் உரிமம். | திரு. R. சுந்தர் ராஜன் | 10,000/– | – | – |
| 02 | மாநகராட்சிக்கு சொந்தமான சர். சி. பி இராமசாமி ஐயர் நினைவு பூங்காவில் மாநகராட்சியால் சுட்டிக் காட்டப்பட்ட இடத்தில் சிறுவர், சிறுமியருக்கான ஆறு வகையான சிறிய அளவிலான விளையாட்டு சாதனங்கள் அமைத்து தற்காலிகமாக கட்டணம் வசூல் செய்திடும் உரிமம். | எவரும் கலந்து கொள்ளவில்லை | – | – | – |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 03 | முதலியார்விளை வாடகை கார் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூல் செய்திடும் உரிமம். | எவரும் கலந்து கொள்ளவில்லை | – | – | 87,.600/– |
| 04 | வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள 12 ½ x 8 ½ ச.அடி அளவில் வீடியோ வாலில் (Video Wall) விளம்பரம் செய்திடும் உரிமம். | எவரும் கலந்து கொள்ளவில்லை | – | – | 3,00,000/– |
| 05 | முக்கூடல் அணை வளாக பகுதியில் 10 x 10 சதுர அடிய அளவில் தற்காலிக ஸ்டால் அமைத்து தரமான திண்பண்டங்கள் விற்பனை செய்திடும் உரிமம். | எவரும் கலந்து கொள்ளவில்லை | – | – | – |
| 06 | அண்ணா மற்றும் வடசேரி பேருந்து நிலையங்களில் வந்து செல்லும் பேருந்துகளிடம் நுழைவு கட்டணம் வசூல் செய்திடும் உரிமம். | எவரும் கலந்து கொள்ளவில்லை | – | – | 18,18,285/– |
| 07 | அண்ணா பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள 12 ½ x 8 ½ ச.அடி அளவில் வீடியோ வாலில் (Video Wall) விளம்பரம் செய்திடும் உரிமம். | எவரும் கலந்து கொள்ளவில்லை | – | – | – |
| 08 | நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான மகராஜா ஸ்ரீ அவிட்டம் திருநாள் நினைவு மாநகராட்சி காப்பக மைதானத்தில் 25.08.2022 முதல் 09.10.2022 வரை பொருட்காட்சி நடைபெற இருப்பதால் கண்டுகளிக்க வருகை தரும் பொது | FIT IMPEX<br>திரு. சத்திய நாராயணன் | – | 1,00,000/– | 1,42,500/– |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மக்களின் வாகனங்களுக்கு, இரு சக்கர வாகனம் 1–க்கு ரூ10/–ம், நான்கு சக்கர வாகனம் 1–க்கு ரூ 40/–ம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | | | | |

<u>அலுவலக குறிப்பு –</u>

1. வரிசை எண்கள் 1 மற்றும் 8–இல் கண்டுள்ள இனங்களுக்கு குறைந்தபட்ச உரிம தொகையே வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற உரிம தொகையினைவிட கூடுதல் தொகைக்கு போகும் என கருதி மேற்படி இனங்களுக்கு தொடர்ச்சியாக தொடர் நாட்களில் மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.
2. வரிசை எண்கள் 2, 3, 4, 5, 6, மற்றும் 7–ல் கண்டுள்ள உரிம இனங்களுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள யாரும் முன்வராததால் மேற்படி உரிம இனங்களுக்கு தொடர்ச்சியாக தொடர் நாட்களில் மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.

மேற்கண்டுள்ளபடி உரிமம் இனங்களுக்கு அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதியுடன் மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1266/2017/அ8

**தீர்மானம் எண்.508 அனுமதிக்கப்பட்டது**

42. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11–ல் ஷாலோம் பகுதியில் போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் இடையூறாக ஒரு மின்கம்பம் அமைந்துள்ளதால் அதனை மாற்றி அந்த தெருவின் அருகாமையில் அமைத்து மின் இணைப்பு வழங்கிடவும், அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்காக.

**அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்**

கோப்பு எண்.5184/2022/இ4

**தீர்மானம் எண்.509 அனுமதிக்கப்பட்டது**

43. இம்மாநகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண்.8–ல் அறுகுவிளை மேலத்தெருவில் ஏற்கெனவே நிற்கும் மின்கம்பங்களில் 11 எண்ணம் புதிய தெருவிளக்குகள் பொருத்துவதற்கும், தமிழ்நாடு மின்சார வாரியத்திலிருந்து கொடுக்கப்படும் கேட்புத் தொகையினை செலுத்துவதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்**

கோப்பு எண்.7951/2022/இ4

**தீர்மானம் எண்.510 அனுமதிக்கப்பட்டது**

44. இம் மாநகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண்.5–ல் காமராஜ் நகர் பகுதியில் நகர்நல மைய கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. கட்டிடத்தின் மேற்கூரையானது மின்சார கம்பிகளை உரசும் அளவுக்கு இடைவெளி இல்லாமல் உள்ளது. இது சம்மந்தமாக பார்வதிபுரம் மின் பிரிவிலிருந்து அறிவிப்பு கடிதம் வரப்பெற்றுள்ளது. ஆகவே KTN, F II 67 என்ற கம்பத்தை Shifting செய்யும் பணிகளுக்கும், அதற்காகும் செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்**

கோப்பு எண்.9167/2022/இ4

**தீர்மானம் எண்.511 அனுமதிக்கப்பட்டது**

45. இம் மாநகராட்சி ஆணையர் அவர்களின் பயன்பாட்டு வாகனம் TN74AU 6969–40000கி.மீ இயங்கியுள்ளதால் பராமரிப்பு மற்றும் பழுது வேலைகள் சரி செய்ய அரசு அங்கீகாரம் பெற்ற சர்வீஸ் சென்டரான டெரிக் மோட்டார்ஸ்(பி) லிட், சுங்கான்கடை நிறுவனத்திற்கு பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவு தொகை ரூ.10000/– (ரூபாய் பத்தாயிரம்) –க்கு பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதிக்காக.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்
2. மேயரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு மற்றும் செலவீனத்தொகை வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.9278/2022/இ2

**தீர்மானம் எண்.512 அனுமதிக்கப்பட்டது**

46. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.38–ல் உள்ள வலம்புரிவிளை உரக்கிடங்கில் ரூ.24,80,000/– மதிப்பீட்டில் சுற்று சுவர் கட்ட நகர்மன்ற தீர்மானம் எண்.557, நாள்.13.06.2016–ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு 29.07.2016 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பெற்றதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 11.08% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்த திருமதி.M.ஹெப்சிபாய் அவர்களுக்கு மதிப்பீட்டு எண்.61/2016–17/இ1 நாள்.13.10.2016–ன் படி வேலை உத்தரவு வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் மேற்படி சுற்று சுவரானது அருகில் நுண் உரக்குடில் (MCC) அமைக்கப்படும் போது கட்டி முடிக்கப்பட்டு விடப்பட்டது. எனவே மதிப்பீட்டு எண்.61/2016–2017 பணிக்கு வழங்கப்பட்ட வேலை உத்தரவினை ரத்து செய்வதுடன் மேற்படி ஒப்பந்தக்காரரால் செலுத்தப்பட்டு காலங்கடந்த வைப்புத்தொகையில் உள்ள ஒப்பந்தப்புள்ளி முன் வைப்பு தொகை ரூ.25,000/– மற்றும் கூடுதல் வைப்பு தொகை ரூ.49,600/–ஐ சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரரான திருமதி.M.ஹெப்சிபாய் அவர்களுக்கு திரும்ப வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – அனுமதிக்கலாம்

கோப்பு எண்.9236/2016/இ1

**தீர்மானம் எண்.513 அனுமதிக்கப்பட்டது**

47. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வட்டவிளை பகுதியில் அமைந்துள்ள சூர்யா நகர் குளத்தினை சுற்றிலும் ரூ.24.50 இலட்சம் செலவில் தடுப்பு சுவர் அமைத்திடும் பணிக்கு (மதிப்பீடு எண்.65/2019–20) 23.10.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பெற்றதில் மதிப்பீட்டை விட 20.31% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்திருந்த ஒப்பந்தக்காரர் திரு.K.கைலாஷ்குமார் என்பவருக்கு 25.11.2019 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டிருந்தது. மேற்படி பணி துவக்கப்படாத நிலையில் இயற்கை இடர்பாடுகளால் அதிக அளவு மழைவெள்ளம் ஏற்பட்டு குளம் நிரம்பி இருந்ததாலும், தற்போது மூலப்பொருட்களின் விலை ஏற்றத்தால் இப்பணி செய்திட இயலாது என ஒப்பந்தக்காரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்ததாலும் மேலும் மேற்படி பணி அம்ரூத் 2.0 திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாலும், மேற்படி பணிக்கு வழங்கப்பட்ட வேலை உத்தரவினை ரத்து செய்வதற்கும் மற்றும் ஒப்பந்தக்காரரால் செலுத்தப்பட்ட ஒப்பந்தப்புள்ளி வைப்புத்தொகை ரூ.24,500/– மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.2,19,150/–ஐ ஒப்பந்தக்காரர் திரு.K.கைலாஷ்குமார் என்பவருக்கு திரும்ப வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – அனுமதிக்கலாம்

கோப்பு எண்.9236/2016/இ1

**தீர்மானம் எண்.514 அனுமதிக்கப்பட்டது**

48. நாகர்கோவில் மாநகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள பதிவறை எழுத்தர் அலுவலக அறை, சமுதாய அமைப்பாளர் அலுவலக அறைகளில் மழை நீரினால் நீர் ஒழுகியதை தொடர்ந்து அந்த அறைகளில் பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் மற்றும் முதல் தளத்தில் உள்ள ஆண்கள் கழிவறையில் பராமரிப்பு பணிகள் ரூ.99,000/– மதிப்பீட்டில் மேற்கொண்டிட மாமன்ற தீர்மானம் எண்.159 நாள்.25.01.2022–ல் வழங்கப்பட்ட நிர்வாக அனுமதியினை தொடர்ந்து பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாநகராட்சிகள் சட்டம் பிரிவு –15–ன் கீழ் மாநகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்தகாரர் திரு.S.முத்து அவர்கள் மூலம் பணி செயலாக்கப்பட்ட விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –**

1. பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2. அவசர அவசியம் கருதி பணி செயலாக்கித்தந்த ஒப்பந்தக்காரர் திரு.S.முத்து அவர்களுக்கு பட்டியல் தொகை வழங்கிடவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.1189/2022/இ1

**தீர்மானம் எண்.515 அனுமதிக்கப்பட்டது**

49. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வடசேரி மீன் சந்தை வளாகத்தினுள் Sump கட்டி குடிநீர் வசதி செய்யவும், டூவிலர் பார்க்கிங் மற்றும் கூடுதலாக பாதை அமைக்கும் பணிக்கு ரூ.3,30,000/– மதிப்பீட்டில் மேற்கொண்ட மாமன்ற தீர்மானம் எண்.340 நாள்.27.05.2022–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து மின்னனு முறை (E–Tendering) –யில் 30.06.2022 அன்று மூன்றாவது முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | திரு.T.அசோக்குமார்<br>ஒப்பந்தக்காரர்<br>இலந்தையடி தட்டு | மதிப்பீட்டை விட 8.00% குறைவு<br>(ரூ.266652.88)/– |

மேற்படி மதிப்பீட்டை விட 8.00% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொண்டு வேலை உத்தரவு வழங்கிட மாமன்றம் அனுமதிக்கலாம். மேலும் மதிப்பீட்டை விட 8.00% குறைவாக ஒப்பந்தப்புள்ளி சமர்பிக்கப்பட்டுள்ளதால் கூடுதல் வைப்பு தொகை ரூ.6600/– செலுத்திய பின் வேலை உத்தரவு வழங்கிடவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு –** அனுமதிக்கலாம்

மதிப்பீட்டு எண்.11/2022–2023

**தீர்மானம் எண்.516 அனுமதிக்கப்பட்டது**

50. நாகர்கோவில் மாநகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரராக உள்ள திரு.P.இராஜகோபாலன் அவர்கள் கடந்த காலத்தில் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கலந்து கொண்டு வேலை கிடைக்கப்பெற்ற பணிகளுக்கு பட்டியல் தொகை அனுமதிக்கப்பட்ட நிலையில் அப்பணிகளுக்கு செலுத்தப்பட்ட ஒப்பந்தப்புள்ளி வைப்பு தொகை, பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட கூடுதல் வைப்பு தொகை மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கலந்து கொண்டு வேலை கிடைக்கப்பெறாத பணிகளுக்கு செலுத்தப்பட்ட ஒப்பந்தப்புள்ளி வைப்புத்தொகை என கீழ்கண்ட விபரப்பட்டியலின் படியான வைப்புத்தொகையினை திரும்ப வழங்கிட கோரியிருந்தார். மேற்படி பட்டியல் தொகை அனுமதிக்கப்பட்ட பணிகளின் பேரில் தணிக்கை தடையேதும் இல்லை. மேலும் மேற்படி வைப்பு தொகைகள் தற்போது காலங்கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் உள்ளதால்

மேற்படி தொகையினை சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர் திரு.P.இராஜகோபாலன் என்பவருக்கு வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | மதிப்பீடு எண் | ஒப்பந்தப்புள்ளி வைப்பு தொகை ரூ. | கூடுதல் வைப்பு தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 296/2012–13 | 13800 | 13800 |
| 2 | 393/2012–13 | 8600 | 8600 |
| 3 | 470/2012–13 | 14700 | 14700 |
| 4 | 520/2012–13 | 10500 | 10500 |
| 5 | 564/2012–13 | 9250 | 9250 |
| 6 | 42/2013–14 | 3700 | 3700 |
| 7 | 43/2013–14 | 3300 | 3300 |
| 8 | 78/2013–14 | 35000 | 35000 |
| 9 | 102/2013–14 | 15000 | 15000 |
| 10 | 103/2013–14 | 15300 | 15300 |
| 11 | 123/2013–14 | 4400 | 4400 |
| 12 | 160/2013–14 | 9850 | 9850 |
| 13 | 161/2013–14 | 9600 | 9600 |
| 14 | 162/2013–14 | 7300 | 7300 |
| 15 | 165/2013–14 | 8600 | 8600 |
| 16 | 167/2013–14 | 8800 | 8800 |
| 17 | 168/2013–14 | 8900 | 8900 |
| 18 | 274/2013–14 | 8900 | 8900 |
| 19 | 280/2013–14 | 8200 | 8200 |
| 20 | 485/2014–15 | 10250 | 10250 |
| 21 | 504/2013–14 | 13800 | 13800 |
| 22 | 227/2014–15 | 23200 | 23200 |
| 23 | 236/2014–15 | 16300 | 16300 |
| 24 | 228/2014–15 | 10600 | 10600 |
| 25 | 45/2015–16 | 24900 | 24900 |
| 26 | 57/2015–16 | 17800 | 17800 |
| 27 | 25/2015–16 | 8300 | 8300 |
| 28 | 47/2015–16 | 9100 | 9100 |
| 29 | 30/2015–16 | 8800 | 8800 |
| 30 | 38/2015–16 | 8300 | 8300 |
| 31 | 156/2015–16 | 8900 | 8900 |
| 32 | 171/2015–16 | 3100 | 3100 |
| 33 | 185/2015–16 | 15000 | 15000 |
| 34 | 199/2015–16 | 3200 | 3200 |
| 35 | 200/2015–16 | 8600 | 8600 |
| 36 | 195/2015–16 | 9100 | 9100 |
| 37 | 167/2015–16 | 8300 | 8300 |
| 38 | 422/2015–16 | 18000 | 18000 |
| 39 | 378/2015–16 | 15300 | 15300 |

| | | | |
|---|---|---|---|
| 40 | 475/2015–16 | 2400 | 2400 |
| 41 | 561/2015–16 | 7800 | 7800 |
| 42 | 564/2015–16 | 9750 | 9750 |
| 43 | 99/2018–19 | 5000 | 5000 |
| 44 | 547/2015–16 | 12000 | – |
| 45 | 450/2015–16 | 9700 | – |
| 46 | 160/2013–14 | 9850 | – |
| 47 | 551/2015–16 | 22000 | – |
| 48 | 15/2015–16 | 12200 | – |
| 49 | 129/2016–17 | 22000 | – |
| 50 | 163/2013–14 | 8000 | – |
| 51 | 149/2013–14 | 4900 | – |
| 52 | 42/2013–14 | 3700 | – |
| 53 | 40/2013–14 | 3600 | – |
| | **மொத்தம்** | **577450** | **469500** |

**அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்**

கோப்பு எண்.10665/2020/இ1

**தீர்மானம் எண்.517 அனுமதிக்கப்பட்டது**

51. நாகர்கோவில் மாநகராட்சியின் 2019–2020–ம் வருவாய் மற்றும் மூலதனநிதி நிதியாண்டு தணிக்கை அறிக்கை, உதவி இயக்குனர், உள்ளாட்சி நிதி தணிக்கை நாகர்கோவில் அவர்கள் கடிதம் ந.க.எண்.399/2021/இ2 நாள்.27.09.2021–ன் படி வெளியிடப்பட்டிருந்தது.

மேற்படி தணிக்கை அறிக்கையில் பத்தி எண்.138–ல் 2019–2020–ம் நிதியாண்டுக்கான தணிக்கை கட்டணம் ரூ.11,27,452/– செலுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி தொகை ரூ.11,27,452/–ஐ வருவாய் நிதியிலிருந்து, தணிக்கை கட்டணமாக தொடர்புடைய அரசு தலைப்பில் செலுத்திட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்**

கோப்பு எண்.213/2014/இ1

**தீர்மானம் எண்.518 அனுமதிக்கப்பட்டது**

52. இம்மாநகராட்சிக்கு சொந்தமான TATA ACE TN74L 7083 வாகனத்திற்கு பழுது பணிகள் மேற்கொள்வது தொடர்பாக 06.06.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டவாறு பெறப்பட்டன.

1. மாதவா மோட்டார்ஸ் – ரூ.93166/–
2. கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ் – ரூ.81599/–

மேற்கண்ட 2 ஒப்பந்தப்புள்ளிகளில் "கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ்" நிறுவனம் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.81599/– குறைவாக உள்ளது என்பதால் மேற்படி வாகனத்திற்கு பழுது பணிகள் மேற்கொள்ள "கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ்" நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –**

1. அனுமதிக்கலாம்

2. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்க நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.329/2021/எச்4

**தீர்மானம் எண்.519 அனுமதிக்கப்பட்டது**

53. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட சவேரியார் கோயில் சந்திப்பு முதல் ஈத்தாமொழி சந்திப்பு வரை உள்ள சாலையில் (தேசிய நெடுஞ்சாலை) தார்தளம் அமைத்தல் பணி ரூ.20.60 இலட்சம் மதிப்பீட்டில் செயலாக்கிட மாமன்ற தீர்மானம் எண்.385 நாள்.24.06.2022-ல் வழங்கப்பட்ட நிர்வாக அனுமதியினை தொடர்ந்து 07.07.2022 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பெற்ற நிலையில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை. மேலும் பணியின் அவசரம் கருதி மறு ஒப்பந்தப்புள்ளி 20.07.2022 அன்று கோரப்பெற்றதில் கீழ்கண்ட விபரப்படி இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலை விபரம் |
|---|---|---|
| 1 | திரு.K. கைலாஷ்குமார் | மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 4.73% அதிகம் |
| 2 | திரு.I.கேட்சன் | மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 25.55% அதிகம் |

மேற்படி இரு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டினை விட அதிக விலை விகிதத்தில் வரப்பெற்று இருந்ததாலும் பொதுமக்கள் நலன் கருதி பணி மிகவும் அவசரமாக செயலாக்கப்படவேண்டிய சூழ்நிலை உள்ளதாலும் L1 ஒப்பந்தக்காரர் திரு.K. கைலாஷ்குமார் அவர்களிடம் முன் இசைவு கோரப்பெற்ற நிலையில் மதிப்பீட்டினை விட 0.01% குறைவாக மேற்படி பணியினை செயலாக்கிட முன் இசைவு வழங்கப்பட்டுள்ளது. எனவே மதிப்பீட்டினை விட 0.01% குறைவான விலை விகிதம் கொண்ட ஒப்பந்தப்புள்ளி சமர்பித்துள்ள ஒப்பந்தக்காரர் திரு.K.கைலாஷ்குமாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொண்டு வேலை உத்தரவு வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –**

1. அனுமதிக்கலாம்
2. பொதுமக்கள் நலன் / பணியின் அவசரம் கருதி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கிடவும் பணி முடிவுற்று செலவு பட்டியல் வழங்கவும் நடவடிக்கை தொடரப்பட்டதையும் மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

மதிப்பீட்டு எண்.24/2022-2023/இ1

**தீர்மானம் எண்.520 அனுமதிக்கப்பட்டது**